Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 1[illegible]

# ஈழநாடு

EELA NADU

போன் 89 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 12 ஆம் நாள் துல்ஹஜ் 11 (24-4-64) வெள்ளிக்கிழமை இதழ் 73

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | [illegible]-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

41 தமிழ் அரசாங்க ஊழியருக்கு கட்டாய ஓய்வு

# உத்தரவை வாபஸாக்க தமிழரசுகட்சி முயற்சி?

## பிரதமர் கொழும்பு திரும்பியதும் செல்வநாயகம் பேச்சுநடத்தலாம்

கொழும்பு, வியாழன்

முதல் தடவையாக, ஒரே முறையில் புகையிரத இலாகாவைச் சேர்ந்த 41 தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வுக்கான மூன்றுமாத முன்னறிவித்தல் நேற்றைய தினம் வழங்கப்பட்டது. இது குறித்து தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் பெரும் திகைப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னறிவித்தலை வாபஸ்பெறச் செய்யும் முயற்சிகளில் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் நுவரெலியாவில் இருந்து திரும்பியதும் திரு. செல்வநாயகம் இது குறித்து ஆட்சேபம் தெரிவிப்பாரென நம்பப்படுகிறது.

கட்டாய ஓய்வுக்கான முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ள இந்த 41 ஊழியர்களும் சிங்களத்தில் தேர்ச்சிபெற முயற்சிக்காததுடன் இப்பொழுதும் தேர்ச்சிபெற முயற்சிக்கவில்லையென புகையிரதஇலாகா உயர்தர அதிகாரியொருவர் இன்று தெரிவித்தார். கட்டாய ஓய்வுக்கான முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ளவர்களில் இனிமேல் சிங்களத் தேர்ச்சி பெற விருப்பம் தெரிவித்துள்ளவர்களும், அடுத்த தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பெயர் கொடுத்தவர்களும் இருப்பதாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார். அரசாங்கத்தின் உத்தரவுகளைத் தாம் செயல்படுத்துவதோடு அரசாங்கத்தின் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவ்விஷயமாகக்கூர்ந்துஆலோசித்தே தாம் முடிவுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். புகையிரத இலாகாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறாமல் இருந்தபோதிலும் தீர ஆராய்ந்து சிங்களத்தில் தேர்ச்சிபெற மறுத்த இந்த 41 ஊழியர்களுக்கே கட்டாய ஓய்வுக்கான முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த முடிவு அவர்களுக்கு அதிருப்தி அளித்தால் அவர்கள் இதை ஆட்சேபித்து பொதுச் சேவைக் கமிஷனுக்கு அப்பீல் செய்ய உரிமையுண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

பௌர்ணமி தோறும்

## யாழ். மாநகரசபை அளிக்கும் கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாநகர பொது மக்களை மகிழ்விக்கும்பொருட்டு உயர்ந்த கலை நிகழ்ச்சிகளை அளிக்க யாழ். மாநகரசபை முன்வந்துள்ளது.பௌர்ணமித் திங்கள் தோறும் நடைபெறவிருக்கும் இக்கலை நிகழ்ச்சிகளை யாழ்ப்பாண திறந்த வெளி அரங்கில் நடத்த யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார்.

இவ்வரிசையில் முதற்தடவையாக இடம்பெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகள், எதிர்வரும் சித்திரைப் பௌர்ணமித் தினமான 26-4-64-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7-00மணியிலிருந்து இரவு 10-00 மணி வரை யாழ்ப்பாண திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

26-4-64-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் (பௌர்ணமி தின) நிகழ்சிகளின் விபரம் வருமாறு:-

1. லலிதஸ்வரநாதபூபதி பி. எஸ. ஆறுமுகம்பிள்ளை கோஷ்டியினர் அளிக்கும் நாதஸ்வரக் கச்சேரி. நாதஸ்வரம்:- லலிதஸ்வரநாதபூபதி பி. எஸ. ஆறுமுகம்பிள்ளை, கே. கோபாலசாமி.

தவில்:-லயஞானகுபேரபூபதி எஸ. வி. தெட்சணாமூர்த்தி, கே. பழனிவேல்.

2. நாகஸ்வர மன்னன் என். கே. பத்மநாதன் கோஷ்டியினர் அளிக்கும் நாகஸ்வரக் கச்சேரி. நாகஸ்வரம்: என். கே. பத்மநாதன், எம்.பி. பாலகிருஷ்ணன், தவில்: வி. என். குமரகுரு, ஏ. கணேஷ்.

3. சங்கீதபூஷணம். எஸ். கணபதிப்பிள்ளை அளிக்கும் இன்னிசை விருந்து. வயலின்: எஸ். ஈஸ்வரசர்மா, மிருதங்கம்: ரி. ஜெயசுந்தரம்.

4 கண்ணன் குழுவினர் அளிக்கும் மெல்லிசை. பாட்டு: ஆர். கிருஷ்ணமூர்த்தி, வயலின்: என். சர்வேஸ்வரசர்மா, ஷாகிபாஜா: எம். கண்ணன், மிருதங்கம் - தபோலா: கே.சி. விநாயகேந்திரன், (ஆல்றவுண்ட்): கே. சி. யோகேந்திரன்.

யாழ்ப்பாண மாநகரசபை இக் கலைநிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தித் தருவதற்கு பொதுமக்களின் ஆதரவு பெரிதும் வேண்டப்படுவதாக யாழ். மேயர்

(2-ம் பக்கம் பார்க்க)

## ஸான்ஸிபார், தங்கனீக்கா ஒரே நாடாக இணையும்

தாருஸ்இஸ்லாம், ஏப். 23

ஸான்ஸிபாரும், தங்கனீக்காவும் ஒரே சுதந்திர நாடாக இணையுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளையும் இணைத்து ஒரே சுதந்திர நாடாக்கும் யோசனைக்கு இரு நாட்டு அதிபர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தங்னீக்கா அதிபர் இதுபற்றித் தெரிவிக்கையில் இரு நாடுகளையும் ஒன்றாக இணைப்பது சம்பந்தமாக தாமும் ஸான்ஸிபார் அதிபரும் இணங்கியுள்ளதாகவும் இவ்வொப்பந்தத்தை தங்கனீக்கா பார்லிமெண்டும் ஸான்ஸிபார் புரட்சிச் சபையும் அங்கீகரிக்கவேண்டுமென்றும் கூறினர்.

ஸான்ஸிபார் 1961-ம் ஆண்டில் சுதந்திரமடைந்தது. தங்கனீக்கா கடந்த வருடம் சுதந்திரமடைந்தது.

## காமன்வெல்த் பிரதமர் மகாநாடு

### பிரதமர் சிறிமா கலந்துகொள்வார்

கொழும்பு, வியாழன்

ஜூலையில் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன் வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் தாம் கலந்து கொள்ளலாம் வார் என நம்புவதாக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரிட்டிஷ் பிரதமர் சேர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியுமுக்கு தெரிவித்துள்ளார்,

## 'சீனா தாக்கினால் பாகிஸ்தானும் தாக்கும்'

—இந்திரா

வாஷிங்டன், ஏப். 23

இந்தியாவை சீனா மீண்டும் தாக்கினால், பாகிஸ்தானும் இத் தாக்குதலில் சேர்ந்து கொள்ளுமென ஸ்ரீமதி இந்திராகாந்தி இங்கு அளித்த ஒரு பேட்டியில் கூறினர். அப்போது பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்கத் தயங்காது என்றும் அவர் கூறினர்.

## சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டம்

கொழும்பு, வியா.

அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் தற்போதைய அரசியல்நிலைபற்றி மிகக் கவனமாக ஆராயப்படும்.

கட்சியின் செயற்குழுவைச் சேர்ந்த 200 அங்கத்தவர்கள் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கூடுவார்கள். இதற்கான ஆயத்தங்களை கட்சியின் தலைமைப்பீடம் கவனித்து வருகிறது. கட்சியின் எதிர்கால கொள்கைகள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்படும்.

## பிரிட்டிஷ் உப தேர்தல்

லண்டன், ஏப். 23

அடுத்த மாதம் பிரிட்டனில் 5 உப தேர்தல்கள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## கவர்னர் ஜெனரல் சுகமடைகிறார்

கொழும்பு, வியாழன்

சுகயீனமுற்று கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா சத்திர சிகிச்சைக்குப் பின்னர் திருப்திகரமான முறையில் தேகசுகமடைந்து வருகிறார். இவர் அடுத்த வாரவாக்கில் ஆஸ்பத்திரியிலிருந்து தமது வாசஸ்தலம் செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

கவர்னர் ஜெனரலைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற இரு சிரேஷ்ட மந்திரிகள் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. அண்மையில் அவருக்கு சத்திரசிகிச்சையளிக்கப்பட்டதால் அவர் பூரண ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியதாக மந்திரிகளுக்குக் கூறப்பட்டது. இவ்விரு மந்திரிகளும் பார்வையாளர் குறிப்புப் புத்தகத்தில் கையெழுத்திடாமலே சென்றனர். ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஏ. ரத்னயக்கா, ஆர். பி. பிரேமதாசா ஆகிய யு. என். பி. பிரமுகர்கள் கையெழுத்துப் புத்தகத்தில் கையெழுத்திட்டுச் சென்றனர்.

## அரசாங்க ஊழியரின் அடுத்த மாத சம்பளம் வெசாக் தினத்துக்கு முன் கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவரினதும் மே மாத சம்பளத்தை வெசாக் தினத்துக்கு முன்னர் வழங்குமாறு நிதிமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன திறைசேரிக் காரியதரிசிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மே மாதம் 25-ந் திகதியே வெசாக் தினமாகும். மே 21-ந் திகதியோ அல்லது 22-ந் திகதியோ சகல இலாகா அரசங்க உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளம் வழங்கப்படுமென திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீநகர், ஏப். 23

முன்னாள் காஷ்மீர் பிரதமர் பக்ஷிகுலாம் முகம்மது சென்ற கார்மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களால் தாக்கினர்.

## 'ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி' அரசாங்கம்

கொழும்பு, வியாழன்

இடதுசாரி ஐக்கியமுன்னணியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் வத்தளை, ஹெந்தலை, ஹெக்கிட்ட ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைகளின் கூட்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டு கட்சிக்கு "ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி" என்று பெயரிட வேண்டுமென்றும் கட்சியின் சின்னமாக கைதான் இருக்கவேண்டுமென்றும் கூறும் மற்றொரு தீர்மானமும் இதே கூட்டத்தில் நிறைவேறியது.

### மணிவாக்கு

தெய்வமே! இன்று என்னைத் தங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். தங்களுக்கு விருப்பமான முறையிலே என்னைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

—பிஷப் தாமஸ் வில்சன்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 12 உ (24-4-64)


## நுவரேலியாப் பேச்சுகள்

நுவரேலியாவிலே பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் சந்தித்து முக்கிய அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக ஒரு செய்தி தெரிவித்தது. கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான முயற்சிகள் நடைபெறுவதாகவும் இடதுசாரிக் கட்சித் தலைவர்களுக்கும் பிரதம மந்திரிக்குமிடையிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கும் இச்சமயத்தில் தமிழ் மக்களின் முக்கிய தலைவர்களில் ஒருவருடன் பிரதமர் பேசியதுபற்றி மகிழ்ந்தோம். ஆனால் பேச்சுகள் எதுவும் நடைபெறவில்லை என்று இப்போது மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாணப்பட்டாலே அவர்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று நாடு முன்னேறமுடியுமென்று பிரதமமந்திரியும் இதர சில மந்திரிகளும் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்திருந்தனர். என்றாலும் சென்ற சில வாரங்களாக இவ்விஷயத்தை முற்றாக மறந்துவிட்டு, இடதுசாரிக் கட்சியினரை மட்டும் கூட்டுச்சேர்த்துக்கொள்ளும் முயற்சிகளே நடைபெற்று வந்திருக்கின்றன. மொழிப்பிரச்னைக்கு தேசியரீதியில் தீர்வுகாண முயற்சி செய்யப்போவதாகவும் சர்வகட்சி மகாநாடு ஒன்று கூட்டப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. இதற்கான நல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்தும்பொருட்டு தமிழரசுக்கட்சி தனது நேரடி நடவடிக்கைத் திட்டத்தையும் ஒத்திவைத்தது. ஆனால் சர்வகட்சி மகாகாட்டு முயற்சி பற்றிய பேச்சையே காணோம்.

நேற்று முன்தினம் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற லெனின் நினைவு தினக் கூட்டத்தில் பேசிய நிதி மந்திரி இலங்கரத்தின, வெளியேயுள்ள அரசியல் ஏகாதிபத்திய வாதிகளின் பிரச்னைகளை எதிர்த்துச் சமாளிப்பதற்கு உள்நாட்டில் ஐக்கியம் நிலவவேண்டியது அவசியமென்பதைச் சரியாக வலியுறுத்திக் கூறினார்.

உள்நாட்டில் ஐக்கியம் ஏற்படவேண்டுமென்பதையும் ஐக்கியம் ஏற்படாதவரை நாடு முன்னேற முடியாதென்பதையும் இன்று பலரும் உணர்ந்துள்ளனர். ஆனால் ஐக்கியத்தை எப்படி உருவாக்குவதென்பதில் தான் கருத்து வேற்றுமை நிலவுகிறது. மொழி மற்றும் சிறுபான்மையோர் பிரச்னைகளுக்கு சர்வகட்சி மகாநாடு கூட்டி தேசிய ரீதியில் தீர்வுகாணவேண்டுமென்பது ஐக்கியத்துக்கு ஒரு சாரார் காட்டும் வழி. இதைப் பொதுவாக பலரும் ஆதரிக்கின்றனர். இடதுசாரிக் கொள்கையின் அடிப்படையில் சோஷலிஸ அரசாங்கம் அமைப்பதன் மூலம் சிறுபான்மையோர் பிரச்னை தீர்ந்து ஐக்கியம் ஏற்பட முடியுமென்பது மற்றொரு சாரார் கருத்து.

எது எப்படியிருப்பினும் சிறுபான்மையினருக்கு, அவர்களுடைய உரிமைகளை வழங்காதவரை நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாதென்பது வெளிப்படை. இதற்கு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளையும் தலைவர்களையும் முதலில் சந்தித்து மனந்திறந்து பேச்சுவார்த்தை நடத்தி நிலைமையை அடிப்படையிலிருந்து ஆராய்ந்து பார்க்கவேண்டியது பிரதமரின் கடமை.

குடியுரிமை, வாக்குரிமையற்று மொழியுரிமையும் இழந்துள்ள இந்திய வம்சாவளி மக்களின் தலைவர்களான திரு. தொண்டமான், திரு. அஸீஸ் ஆகியோரையும் பிரதமர் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். இதன் பின்னர் சர்வகட்சித் தலைவர்களையும் கொண்ட வட்ட மேசை மகாநாடுகூட்டி தேசிய பிரச்னைகளுக்குத் தேசிய ரீதியில் தீர்வுகாண முயற்சி செய்யவேண்டும். இவ்வித முயற்சி இப்போதுள்ள அரசியல் முட்டுக்கட்டையைத் தளர்த்தவும், இரு சமூக நல்லெண்ணத்தையும் வளர்க்கவும் பெரிதும் உதவுவதுடன், நாடு முன்னேறவும் வழிசெய்வதாக இருக்கும். இந்நாட்டிலே இரண்டாவது பெரிய சமூகமாக வாழும் தமிழ் மக்களின் அபிமானத்தையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டியது பிரதம மந்திரியின் அவசர கடமை. இதில் அவர் வெற்றி பெற்றால்தான் வரது பிரச்னையும் நாட்டின் பிரச்னையும் தீர வழி பிறக்கும்.

### இந்தியாவில் ஈதுல்பித்ர்

புதுடில்லி, ஏப்ரல் 23

நாடு முழுதுமுள்ள பாரத முஸ்லிம்கள் இன்று ஈதுல் பித்ரைக் கொண்டாடினார்கள். உப-ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுஸெய்ன் இதுசம்பந்தமாக ஒரு செய்தியை விடுத்தார். ஜும்மா மசூதியில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர். பம்பாயில் 30 ஆயிரம் முஸ்லிம்களும், பாட்னாவில் 30,000 முஸ்லிம்களும் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

பாகிஸ்தானில் வயதுவந்தோர் அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென செல்வி பாத்திமாஜின்னா விடுத்துள்ள ஈதுல்பித்ர் செய்தியில் கூறியிருக்கிறார்.

### பென்ஷன் விரைவில் கிடைக்க நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

பென்ஷன்களை விரைவில் வழங்குவதற்கான வழிவகைகள் பற்றி சிபார்சுசெய்வதற்கென நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன நேற்று ஒரு விசேஷ கமிட்டி யொன்றை நியமித்துள்ளார்.

# "பட்டினசபை காரியதரிசி நியமனம் இப்போது இல்லை"

## உள்ளூராட்சி சேவைக்கமிஷன் அறிவிப்பு

நல்லூர், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டின சபைக்கு புதிய செயலாளர் நியமிப்பதற்கு மேலும் பல மாதங்கள் செல்லவேண்டுமென்று உள்ளூராட்சி ஆணையாளர் காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவரிடம் தெரிவித்துள்ளார்.

பட்டினசபைக்கு காரியதரிசி உடனடியாக அனுப்பவசதியில்லை என உள்ளூராட்சிக் கமிஷனர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் தெரிவித்திருக்கிறார். திரு. செல்வநாயகம் கமிஷனருடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக பட்டின சபையின் பிரதம குமாஸ்தா பதில் காரியதரிசியாகக் கடமையாற்ற இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரியதரிசியின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட மூவர் இருக்கிறார்களெனவும் அவர்களில் முதல் இருவர் சிங்களவர்களாக இருப்பதாகவும் கமிஷனர் தெரிவித்தார். மூன்றாவதாக உள்ள தமிழரை பட்டின சபைக்குக் காரியதரிசியாக நியமிப்பதானால் முதலிலுள்ள இருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டிய நிலை உருவாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் உள்ளூராட்சிக் கமிஷனர் அலுவலக அதிகாரிகளுடன் பட்டின சபையின் நிர்வாகம் பற்றி பேச்சு நடத்தினர். பட்டின சபையின் தேவைகள் பற்றியும் தலைவர் எடுத்துரைத்தார்.

மாவிட்டபுரத்திலுள்ள உப மின்சார நிலையத்தை பட்டின சபைக்கு வழங்க வேண்டுமென தலைவர் கேட்டதற்கு அதிகாரிகள் சம்மதம் தெரிவித்தனர். ஒழுங்கைகளுக்கு மின்சார விநியோகம் வழங்குவதற்கும் அதிகாரிகள் சம்மதித்தனர்.

பட்டினசபை மின்சார சூப்பிரிண்டன்டை பட்டினசபை பதவிநீக்கஞ் செய்துள்ளதால் அவரது கடமையைச் செய்ய லைன்ஸ்மென்னுக்கு அதிகாரம் வழங்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

# கலப்பு அரசாங்கத்துக்கு பல தலைவர்கள் ஆதரவு

## லெனின் தினக்கூட்டத்தில் பேச்சு

கொழும்பு, வியாழன்

நாட்டின் பிரச்னைகளை ஒரு கலப்பு அரசாங்கம் அமைப்பதின் மூலமே தீர்க்க முடியும் என்ற கருத்தை நேற்று புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற லெனின் தினக் கூட்டத்தில் பல தலைவர்கள் வற்புறுத்திப் பேசினர். கூட்டத்திற்கு திரு. ஜார்ஜ் ராஜபக்ஷ தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பேசவிருந்த டாக்டர் என். எம். பெரேரா வரவில்லை.

திரு. டி. பி. இலங்கரத்ன பேசுகையில் வெற்றி பெறுவது கஷ்டமில்லை என்றும், அதைப் பாதுகாப்பதே கஷ்டம் என்றும் கூறினார்.

"அநேக நாடுகளுக்கு இலங்கையில் போலவே உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்னைகள் இருக்கின்றன அரசியல் பொருளாதாரப் பிரச்னைகள் இருக்கின்றன. வெளி ஏகாதிபத்திய சக்திகளை முறியடிக்க உள்நாட்டில் ஒற்றுமை வேண்டும். சோஷலிஸ்டுகள் ஒன்றுபடாவிட்டால் முதலாளித்துவ, ஏகாதிபத்திய, காலனி சக்திகள் வெற்றி பெற்றுவிடும் என்றும் அவர் கூறினார்.

திரு. பிலிப் குணவர்த்தன ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் தொழிலாளிகளுக்குச் சிலர் வாயளவில் மட்டுமே சேவைசெய்கிறார்கள் என்றார்.

"முதலாளித்துவ வகுப்பினரை நசுக்குவது அவசியமானது. அவர்களுடன் உடனிருந்து வாழ்வதால் இப்போது ஒன்றும் நஷ்டமில்லை, ஏனெனில் பலவீனமான நிலையிலிருக்கும் அவர்களால் தூக்க முடியாது. முதலாளித்துவ முறையில் தொழிலாளியின் நிலையை உயர்த்த முடியும் என திரு. டட்லி நம்புகிறார்" என்றும் அவர் கூறினார்.

"சொந்த நாட்டில் சோஷலிஸத்தைப் புகுத்திய லெனின் இதர நாடுகளிலும் அதை அனுஷ்டிக்க முடியும் என்பதைக் காட்டியிருக்கிறார்" என டாக்டர் விக்ரமசிங்கா கூறினார். இன்று இலங்கையை எதிர் நோக்கும் நெருக்கடியான நிலையில் பொறுப்புடன் நாம் செயலாற்றவேண்டும் என்றும் அவர் கூறினார்.

திரு. பீட்டர்கெனமன் பேசுகையில், மக்கள் இப்போது சோஷலிஸ கொள்கைகளை ஏற்றுக்கொண்டார்கள் என்றும் சோஷலிஸத்தின் மூலமே பொருளாதார சுதந்திரத்தை அடைய முடியும் என்றும் கூறினார்.

திரு. ஜார்ஜ் ராஜபக்ஷ, திரு. ஏ. அஸீஸ், திரு. அனில் முனசிங்கா, சோவியத் தூதர் திரு. டரகனேவ், ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஜார்ஜ் ஹியூஸ் ஆகியோரும் பேசினர்.

## யாழ். மாநகர . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார் தமிழ் பேசும் மக்கள், நம் நாட்டுக் கலைஞர்களைக் கௌரவித்து ஊக்குவித்து வந்தால் மட்டிலுமே, தமிழ்க் கலைகள் இந்நாட்டில் காப்பாற்றப்படவும் மென்மேலும் அவை செழித்தோங்கவும் வழிபிறக்கும் என்றும், ஆண்களும், பெண்களும், பெரியவர்களும், சிறுவர்களுமாக ஆயிரமாயிரமாக இக்கலை நிகழ்ச்சிகளை அனுபவித்து இன்புற திரண்டுவருமாறும் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்ப் பேசும் மக்கள் யாவருக்கும் மேயர் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

இரவு 10 மணி இருக்கும். தனிமையாக இருந்தேன். காற்றினிலே இனிமையான கீதம் எங்கிருந்தோ வந்துகொண்டிருந்தது. விசாரித்ததில் ரஸிக ரஞ்சன சபா இசைவிழாவிலிருந்து இந்தக்கீதம் வருவதாகத் தெரிந்தது. அந்த விழாவுக்கு நேரில் சென்று கேட்க முடியாதது எவ்வளவு நஷ்டமென்று உணர்ந்தேன்.

பெருமாள் கோவில் முன்புறம்தான் பல வருடங்களாக இந்த விழா நடைபெற்று வந்தது. இந்த வருடம் அரசடிப் பிள்ளையார் இந்த இசை விழாவைத் தம் கோவிலில் நடத்துமாறு செய்திருக்கின்றார். காரணம் என்னவோ தெரியவில்லை.

இது எப்படியாயினும், ஈழத்திலே இருபத்தைந்து வருடங்களுக்குமுன் இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இப்போது இசை எவ்வளவோ முன்னேறியுள்ளதை நினைத்து மகிழ்ந்தேன்.

சாவகச்சேரியிலும் இப்போது ஒரு இசை விழா நடக்கின்றது. சில நாட்களில் கொழும்பிலே அருணகிரிநாதரின் பெயரில் இசை விழா நடக்கப்போவதாக ஒரு செய்தியைப் பார்த்தேன் இன்னும் எவ்வளவு இடங்களில் நடக்கின்றனவோ!

* * *

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?" என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவர் மறைவு கலை உலகுக்கு எவ்வளவு பெரிய நஷ்டம்! பாரதி பரம்பரையில்வந்த அவருக்கு என் அஞ்சலி.

இச்சமயம் அரசியலை நினைத்துக்கொண்டால் தமிழராகிய நமக்கெல்லாம் ஒரே துன்பம். நாம் இசை விழாக்களை அடிக்கடி ஆங்காங்கே நடத்துவதால், புரட்சிக் கவிஞர் கூறியபடி, துன்பத்தை மறந்து சற்றே இன்பமடையமுடிவதாக இருக்கிறது.

பல கலைஞர்களும் நமக்கு இந்த இன்பத்தை வாரிவழங்குகின்றார்கள். அவர்களில் பலரும் எவ்வித பிரதி பயனும் எதிர்பாராமல், பலபல கலைவிருந்துகளை அளிப்பதாகத் தெரிகிறது. இந்த "இசைதான"த்துக்காக அவர்களையும் இவ்விழாக்களுக்கு ஒழுங்கு செய்து உதவுபவர்களையும் நாம் நன்றியுடன் பாராட்ட வேண்டும்.

* *

சமீபத்தில் காலரநகர் கோவிலிலே மிருதங்க அரங்கேற்றம் நடந்ததுபற்றிச் சொன்னேனல்லவா? அன்று வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அமிர்தலிங்கத்தார் பேசுகையில், இங்குள்ள பல சங்கீத பூஷணங்களும் வேலை கிடைக்காமல் எவ்வளவு அவதிப்படுகிறார்களென்பதைப்பற்றி உருக்கமாகச் சொன்னார்.

சிதம்பரம் சென்று பல்லாண்டுகள் பணச் செலவு செய்து பாடுபட்டு, சங்கீத பூஷணமெனும் பட்டமும் பெற்று வந்தவர்களில் பலரும் இங்கு இசை ஆசிரியர் பதவிக்கு மனுச் செய்து மாதக்கணக்காக, வருடக்கணக்காக வேலையின்றிக் காத்துக் கிடந்து ஏமாற்றமடைந்துள்ளது எனக்குத் தெரியும். இது அக்கலைஞர்களுக்கும், கலாதேவிக்குமே அரசாங்கம் செய்யும் பெரிய பாவம்!

இங்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிலே இளம் கலைஞர் ஒருவர் தன் நிலையைபற்றி சென்னை 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் கூறியிருப்பதைப் படித்தபோது, அங்குள்ளதைவிட இங்கு நிலைமை சற்றே மேலாகுமோ என்று தோன்றுகின்றது.

"உங்கள் குழந்தைகளைச் சங்கீதத்துறையில் விடுவீர்களா?"

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

என்று கேட்டதற்கு, அந்த இளம் வித்வான் அடியோடு மறுத்துவிட்டார். தானே தெரியாமல் வந்துவிட்டதாயும், ஹோட்டலிலே வேலைக்குப் போனாலும் தினம் இரண்டு ரூபாய் நிச்சயமாகக் கிடைக்குமென்றும் அவர் மனமுடைந்து கூறியதிலிருந்து இளம் இசைக் கலைஞர்களின் உள்ளம் எப்படி உள்ளதென்பதை உணரலாம். நமது துன்பத்தைப் போக்கி இன்பமூட்டும் இக்கலைஞர்களுக்கு இங்கு அரசாங்கமும் நாமும் என்ன செய்யப்போகிறோம்?

* * *

நம்பனை நால்வேதங் கரைகண்டானை ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக், கம்பனைக் கல்லாலிருந்தான் தன்னைக் கற்பகமாயடியார்கட்கருள் செய்வானைச், செம்பொன்னைப் பவளத்தைத் திரளுமுத்தைத் திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை, அம்பொன்னை யாவடுதண் துறையுள் மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே.

—திருநாவுக்கரசர்.

# லாவோஸில் ஐக்கிய அரசாங்கம் அமைக்க வலதுசாரிகள் முயற்சி

## மன்னருடன் சுவர்ணபூமாவும் பல நாட்டுத் தூதர்களும் சந்திப்பு

லுவாங்பிரபாங், ஏப். 23

லாவோஸ் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு மன்னர் சவனவதனுவை பிரதமர் சுவர்ண பூமாவும், பலநாடுகளின் ராஜீயத் தூதர்களும் சந்தித்துப் பேசினர்.

இதற்கிடையில் சகல கட்சிகளையும் கொண்ட ஐக்கிய அரசாங்கம் ஒன்றை லாவோஸில் அமைப்பதே தங்கள் லட்சியம் என வலதுசாரி பேச்சாளர் ஒருவர் கூறினர்.

லாவோஸ் தலைநகர் வியண்டயனில் வலது சாரிகளின் பிடிப்பு நீடித்துவருவதாகச் சொல்லப்படுகிறது.

புதிய ஐக்கிய அரசாங்கம் இளவரசர் சுவர்ணபூமாவின் தலைமையில் இருக்க வேண்டும் எனவும், லாவோஸின் வலதுசாரி, இடதுசாரி, நடுநிலைமை ராணுவங்கள் மூன்றும் ஒன்ருக இணைக்கப்பட்டு பலமான அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என்றும், மேற் கண்ட வலதுசாரிப் பேச்சாளர் மேலும் கூறினர்.

சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனுக்குத் தலைமை வகிக்கும் இந்தியாவின் ராஜீயத் தூதர் நேற்று மன்னரைச் சந்தித்துப் பேசினர். அமெரிக்க, ரஷ்யத் தூதர்களும் சந்தித்துப் பேசினர். இளவரசர் சார்ணபூமாவின் தலைமையிலான நடுநிலைமை அரசாங்கத்தை மட்டுமே தாம் அங்கீகரிக்க முடியும் என ரஷ்யத் தூதர் தெரிவித்தார்.

லாவோஸில் தற்போதுள்ள சிரமங்கள் அகன்றுவிடும் எனத் தாம் நம்புவதாக பிரதமர் நேரு இளவரசர் சுவர்ணபூமாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருக்கிருர்.

ஜெனிவா பிரகடனப்படி பூமாவின் அரசாங்கத்துக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கிறதென்றும், இளவரசர் கலப்பு அரசாங்கத்தின் பிரதமராக இருந்து சமரசம், ஒற்றுமை ஆகியவற்றை ஏற்படுத்த மேற் கொண்ட முயற்சிகளை தாம் பாராட்டுவதாயும் நேரு கூறியிருக்கிருர்.

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க், வாஷிங்டனிலுள்ள ரஷ்யத்தூதருடன் லாவோஸ் நிலைமை பற்றி சம்பாஷணை நடத்தினர்.

## "சிறைபிடித்த பொலிஸாரை விடுதலை செய்க"

### பாகிஸ்தானுக்கு இந்தியா குறிப்பு

புதுடில்லி, ஏப் 23

காஷ்மீர் போர் நிறுத்தக் கோட்டைத் தாண்டிவந்து இந்திய ஆயுத ரோந்து பொலிசார் மீது, கடந்த பெப்ரவரி 21-ம் திகதி பாஸ்தானியர் மறைந்திருந்து தாக்கியது குறித்து இந்தியா, பாகிஸ்தானுக்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

சிறைப்பிடித்துள்ள 9 இந்திய பொலிசாரை திருப்பியளிக்குமாறும் பாகிஸ்தான் ஹைகமிஷனர் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆட்சேபக் குறிப்பில் கேட்கப்பட்டிருக்கிறது.

உயிரிழந்த 14 பொலிசாரின் குடும்பங்களுக்கு முழு நஷ்டஈடு தரவேண்டுமென்றும் இந்தியா கோரியிருக்கிறது.

இத்தாக்குதல் வேண்டுமென்றே திட்டமிட்டு நடத்தப்பட்டதாய்க் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்ட ஐ. நா. ராணுவப் பார்வையாளர்கள் பாகிஸ்தான் இவ்விஷயத்தில் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாகத் தீர்ப்பளித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நியூயோர்க்கில் மாபெரும் உலக பொருட்காட்சி

### ஜனதிபதி ஜோன்ஸன் திறந்துவைத்தார்

நியூயோர்க, ஏப். 23

நியூயோர்க உலகப் பொருட்காட்சியை அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸன் நேற்று ஆரம்பித்து வைத்தார். இதில் 60 நாடுகள் கலந்துகொள்கின்றன.

ஜனதிபதி அப்போது பேசுகையில், உலக சமாதானம் சாத்தியமானதாகவும், சமீபித்தும் வருகிறது என்ருர். விஞ்ஞானத்தையும், சண்டை மனப்பான்மையையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது மூலம் சமாதானம் சாத்தியம் என்றும் அவர் கூறினர்.

உலக நாடுகளின் சார்பில் ஸ்ரீமதி இந்திராகாந்தி சொற்பொழிவாற்றுகையில் நுட்ப அறிவு முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்றும், ஆனல் மூன்றில் இரண்டு பங்குபேருக்கு உயிர்வாழ வழியில்லாமல் இருக்கும்போது அதனல் பலனில்லை என்றும் குறிப்பிட்டார்.

"உலகில் இன்னும் மோசமான வறுமை இருந்து வருகிறது. சுதந்திரம், நீதி, செழிப்பு ஆகிய கொள்கைகளுக்காக நாடுகள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

உலகப் பொருட்காட்சி 2 வருடங்களுக்கு நடைபெறும்.

## சிரியாவில் அரசாங்க விரோத ஆர்ப்பாட்டம்

### வேலைநிறுத்தம் பரவுகிறதாம்

டமாஸ்கஸ், ஏப். 23

சிரியாவிலுள்ள டமாஸ்கஸ், அலெப்பே ஆகிய நகரங்களில் பொதுவேலைநிறுத்தம் பரவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

மத்திய சிரியாவிலிருந்து டமாஸ்கஸ் திரும்பிய பிரதமர் மேஜர்-ஜெனரல் அமீன் அல்-ஹாபிஸ், கடந்த வாரம் மத்தியசிரியாவிலுள்ள ஹாமாவில் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்புச் சம்பவங்களை ஈராக் ஜனதிபதி அரீபும், ஈராக்கிலுள்ள ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதரகமுமே தூண்டிவிட்டனர் என்றும், சதிகாரர்களுக்கு அவர்கள் பணம் கொடுத்துவருவதாயும் குற்றஞ்சாட்டினர்.

ஹாமா சதி நசுக்கப்பட்டபின் காவலில் வைக்கப்பட்டவர்கள் இதை ஊர்ஜிதம் செய்ததாயும் அவர் மேலும் கூறினர். ஹாமாவில் அரசாங்கவிரோத ஆர்ப்பாட்டக்காரர்களுக்குச் சாதகமாக வேலை நிறுத்தம் இருந்துவருவதாய் உள்நாட்டு மந்திரி கூறினர்.

ஹாமாவிலுள்ள இடிந்த மசூதியினடியில் ஏராளமான முஸ்லிம் குருமார்களின் பிரேதங்கள் கிடப்பதாக கெய்ரோ ரேடியோ அறிவித்தது. மசூதி குண்டுகளால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இச்சம்பவம் ஏற்பட்டதாக கூறப்பட்டது.

ஈராக் பத்திரிகைகளும், ரேடியோவும் சிரிய ஆட்சியாளரைக் தாக்கியிருக்கின்றன.

## அன்னையின் பரிகாரம்

டெல்அவிவ், ஏப். 23

குருடும், செவிடும், ஊமையும், மனவளர்ச்சியடையாததுமான தனது மூன்றரை வயதுப் புதல்வனைக் கொலை செய்ததாக 34வயதான ஸ்ரீமதி இஸேல்காப்ரி என்ற தாயை 15 நாட்களுக்கு ரிமாண்டில் வைக்குமாறு டெல்அவிவ் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாரிஸில் பிறந்த, பயிற்சி பெற்ற தாதியான ஸ்ரீமதி காப்ரி, தனது குழந்தை தொடர்ந்து கஷ்டப்படுவதைச் சகிக்க முடியாமல்தான் இவ்வாறு செய்ததாகக் கூறினர்

குழந்தைக்குத் தூக்க மாத்திரைகளைக் கொடுத்து, குளிக்கும் தொட்டியில் அமுக்கிக் கொன்றபின், அவர் பொலிசில் சரணடைந்தார்.

## ரயிலைக் கண்டு அதிசயம்

எர்ணகுளம், ஏப். 23

லட்சத் தீவுகளைச் சேர்ந்த தேசிய மாணவர் படையின் முதல் கோஷ்டியைச் சேர்ந்த 3 பேர், வருடாந்தப் பயிற்சிக்காக இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் தமது வாழ்க்கையில் ரயில்கள், பஸ்கள், தார் ரோடுகள் ஆகியவற்றைப் பார்த்ததேயில்லை. ரயிலைக்கண்டதும் அவர்கள் குஷியாகக் குதித்தனர். வாகனங்களைக் கண்டு அதிசயித்தனர்.

## 267000 அகதிகள்

கல்கத்தா, ஏப். 23

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து கொடுமை தாங்காமல் ஏராளமான பௌத்த அகதிகள் இந்தியா வருவது குறித்து கல்கத்தாவில் கூடிய பாரத மகா போதிசங்கம் கண்டனமும் கவலையும் தெரிவித்திருக்கிறது.

இதுவரை மொத்தம் 2,67,000 அகதிகள் இந்தியாவுக்கு வந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## மாணிக்கவேலு மேல்சபைத் தலைவர்

சென்னை, ஏப்ரல் 23

சென்னை மேல்சபைத் தலைவராக திரு. மாணிக்கவேலு தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர்.

ஓய்வுபெறும் டாக்டர் பி.வி. செரியனுக்குப் பதில், தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. மாணிக்கவேலு முன்பு சென்னை அரசாங்கத்தில் மந்திரியாகப் பதவிவகித்தார்.

## "ஹரிஜன முன்னேற்றத்தில் நேரடி அக்கறைகாட்டுக"

### முதல் மந்திரிகளுக்கு நேரு கடிதம்

புதுடில்லி, ஏப். 23

ஹரிஜனங்கள், பூர்வீகக் குடிகளுக்கு வேலை தருவது சம்பந்தமாக சமீபத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் சிபார்சுகளை நிறைவேற்றுவதில் முதல் மந்திரியிடம் நேரடியாக அக்கறை கொள்ளவேண்டும் என பிரதமர் நேரு கேட்டுக்கொண்டிருக்கிருர்.

முதல் மந்திரிகளுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் முக்கியமாக பொருளாதார முன்னேற்றம், அதிகப்படி வேலை வாய்ப்புத்துறைகளில் ஹரிஜனங்கள், பூர்வீகக்குடிகள் அபிவிருத்தி மிகவும் நிதானமாக இருந்து வருவதைப் பற்றி அவ்வகுப்பினரிடையே பெருமளவுக்கு அதிருப்தி பரவியிருப்பதை நேருஜி சுட்டிக்காட்டியிருக்கிருர்.

ஹரிஜனங்கள், பழங்குடி மக்கள் ஆகியோரின் பொருளாதார, சமூக நிலை உயர்வை துரிதப்படுத்துவதற்கு நிர்வாக முறையிலும், இதர வழிகளிலும் செய்யப்படுமாறு பிரதமர் கோரியிருக்கிருர்.

## மொழிவாரி பிரிவினையால் ஆந்திரத்தில் முன்னேற்றம்

### பொட்டி ராமுலு சிலைதிறப்பில் முதல் மந்திரி தகவல்

சென்னை, ஏப். 23

மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டது குறித்துத் தனக்கு வருத்தமில்லையென்றும், தனி மாகாணமாகப் பிரிந்தபிறகு ஆந்திரர்கள் மிகவும் முன்னேறியிருப்பதாயும் ஆந்திரப்பிரதேச முதன் மந்திரி திரு. பிரமானந்த ரெட்டி இங்கு கூறினர்.

பொட்டி ஸ்ரீ ராமுலு ஞாபகார்த்தக் கட்டிடத்தில் காலஞ்சென்ற ஸ்ரீ ராமுலுவின் சிலையைத் திறந்து வைத்துப் பேசியபோதே இவ்வாறு அவர் கூறினர்.

காலஞ்சென்ற ஸ்ரீ ராமுலுவின் தியாகம் காரணமாகவே ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டதென்றும், சாகும்வரை அவர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டதன் விளைவாகவே ஆந்திர தனி ராஜ்யம் ஏற்பட்டதென்றும் ஸ்ரீ ரெட்டி கூறினர்.

## பர்மிய இந்தியரை அழைத்துவர கப்பல் சர்வீஸ்

### தேசியமயத்தின் விளைவு

புதுடில்லி, ஏப். 23

இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையே விரைவில் கப்பல் போக்குவரத்து சேவை ஆரம்பமாக விருக்கிறது.

பர்மாவில் கடைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ளும் திட்டத்தினல் பாதிக்கப்பட்டு, நாடுதிரும்ப விரும்பும் இந்தியர்களை முக்கியமாகக் கருத்தில் கொண்டு இது ஆரம்பிக்கப்படுகிறது.

இந்தியா-பர்மாவுக்கிடையே விடப்படும் விமான சேவையும் அதிகரிக்கப்படும்.

பர்மா பூராவிலும் கடைகளை தேசியமயமாக்கும் திட்டத்தினல் அநேக லட்சம் இந்தியர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது ரங்கூனில் மட்டும் 1500 இந்தியரின் கடைகள் மூடப்பட்டுள்ளன. ரங்கூனில் இந்தியர்களுக்கு ரூ. 5 கோடி பெறுமான சொத்துக்கள் இருக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் இந்திய தானிகர் யாருமில்லாத குறை பெரிதும் உணரப் படுகிறது. அங்கு ஸ்தானிகராய் இருந்த திரு. ஆர். எஸ். மணி சில மாதங்களுக்கு முன் யூகோஸ்லேவியாவுக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு அடுத்தபடி யார் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. மஜி கடற்படை தளபதி கட்டாரி இந்தஸ்தானத்திற்கு நியமிக்கப்படலாம் எனச் சொல்லப்படுகிறது.

## "தென் ரொடீஷிய தலைவராக நெகோமோவுக்கு ஆதரவு தருக"

### ஆபிரிக்க அதிபர்களுக்கு வடபகுதி பிரதமர் அறிவிப்பு

கிட்வி, ஏப். 23

திரு. ஜோஷுவா நெகோமோவையே தென் ரொடீஷியாவின் தலைவராக ஏற்று ஆதரிக்கவேண்டும் என வட ரொடீஷியப் பிரதமர் டாக்டர் கென்னத் கவுண்டா ஆபிரிக்க அரசாங்கங்களின் அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

கிழக்கு, மத்திய, தென்னபிரிக்கா சுதந்திர இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் இந்த அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதாக அவர் கூறினர்.

ஸ்ரீ நெகோமோவையும், அவருடைய 3 சகாக்களையும் தென் ரொடீஷிய அரசாங்கம் வெகு தூரத்திலுள்ள எல்லைப்பகுதிக்கு பிரஷ்டம் செய்திருக்கிறது. நெகோமோ தென் ரொடீஷிய மக்களின் உண்மையான தலைவர் என்றும் அரசாங்கம் பிரஷ்டம் செய்திருப்பினும், அவர் மக்களுடைய உள்ளத்தில் வசிப்பதாயும் டாக்டர் கவுண்டா கூறினர்.

---

புதுடில்லி, ஏப். 23

இந்தியாவுடன் காஷ்மீர் இணைப்பு இறுதியானது என்றும், இந்திய பார்லிமெண்ட் உட்பட எந்த சக்தியும் இதை மாற்ற முடியாது என்றும், ஷேக் அப்துல்லா அதிகாரத்திலிருந்தபோதே இது பூர்த்தியாகிவிட்டதென்றும் முன்னள் பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் ஒரு கூட்டத்தில் பேசியபோது தெரிவித்தார்.

# சுதந்திரமாக இயங்கும் பத்திரிகை கார்ப்பரேஷன் நல்லது

## பத்திரிகை கமிஷன்முன் கருணதிலகா சாட்சியம்

கொழும்பு, வியாழன்

பிரிட்டிஷ் ஒலிபரப்பு கார்ப்பரேஷன்போல று சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைக் கமிஷன் இருக்கவேண்டுமெனத் தாம் அபிப்பிராயப்படுவதாக பத்திரிகைக்கமிஷன்முன் சாட்சியமளித்த திரு. நிமால் கருணதிலகா கூறினர்.

இலங்கை பத்திரிகைச் சங்க சார்பில் சாட்சியமளித்த திரு. நிமால் கருணதிலகா தொடர்ந்து கூறியதாவது:

சென்ற இருமாத காலமாக, மூடுமந்திரமாக இருக்கும்கூட்டு அரசாங்கம்பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

நெருக்கடியான காலத்தில் அரசாங்க செய்திகளுக்கு பத்திரிகைகள் போதியளவு இடம் கொடுக்கவில்லை.

தலைவர் (திரு. கே. டி. டி' சில்வா):

பத்திரிகைகள் தேசாபிமானமற்றிருப்பதுவே பிரச்சினையாக இருக்கிறது. அரசாங்க செய்திகளுக்கு அதிக இடமளித்தால் பிரச்சினை எதுவுமே இருக்கமாட்டாது

திரு. கருணதிலகா: பத்திரிகையாளர்கள் கதைகள் புனைவதில்லை. அவர்கள் நெருக்கடியைத் தோற்றுவிக்க முடியாது.

மூன்று பத்திரிகைக் குழுக்களில் ஒரு குழு அரசாங்கச் செய்திகளை தாராளமாக வெளியிட சுதந்திரமாக இயங்கும் கார்ப்பரேஷனுக்கப்பட வேண்டும்.

தலைவர்: எந்தக்குழு கார்ப்பரேஷனுக்கப்படவேண்டுமெனக் கருதுகிறீர்?

திரு. கருணதிலகா: 'டைம்ஸ் ஆப் சிலோன்' கார்ப்பரேஷனுக்கப்படவேண்டும்.

கொள்கைகளைப் பொறுத்தவரை 'தினமின' 1956-ம் வருடத்துக்கு முன்னரே சிங்கள மொழிக் கோரிக்கைக்கு ஆதரவளித்துவந்துள்ளது.

பத்திரிகை கவுன்சில் அமைப்பது சம்பந்தமாக திரு கருணதிலகா தெரிவிக்கையில் இந்த கவுன்சிலுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

திரு. அபயகோன்: அப்படியென்றால் அதன் அங்கத்தவர்களுக்கு சட்டப் பயிற்சி இருக்க வேண்டும்.

திரு. கருணதிலகா: பிரபுக்கள்சபையில் பிரிவிக் கவுன்சில் இருப்பதுபோன்று ஒரு விசேஷ மிட்டி இதற்கென நியமிக்கப்படவேண்டும்.

எழுத்தாளர்களுக்கு வசதியளிக்கப்படவேண்டும் என்பது பற்றி அவர் குறிப்பிட்டுத் தெரிவித்ததாவது:

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் பத்திரிகையாளருக்குப் பலவித வசதிகள் அளிக்கப்படவேண்டுமென சிபார்சுகள் செய்துள்ளது. எந்த நாட்டுக்கும் எழுத்தாளர்கள் பிரயாணம்செய்ய அனுமதிக்கப்படவேண்டுமென்பது இவற்றில் ஒன்று. ஆனல் இலங்கையில் இது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு ரயிவிலும் மற்றும் அரசாங்க போக்குவரத்து சேவைகளிலும் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

# 'தலைமைப் பதவியை விடமாட்டேன்'

திருவானந்தபுரம், ஏப். 23

கேரள சட்டசபை கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப பதவியை ராஜினமாச் செய்யத் தாம் தயாராக இல்லையென திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் கூறினர்.

# தகவல் புத்தகத்தில் மாற்றம்பற்றி ஆலோசிக்கப்பட்டது

## சதிவழக்கில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

கொழும்பு, வியாழன்

தகவல் புத்தகத்தில் சாட்சி பதிந்திருந்த எழுத்தில் சில திருத்தம் செய்யப்படவேண்டுமென காலி பொலிஸ் சூப்பிரின்டன் திரு. வி. ஈ. பெரேரா, உதவி பொலிஸ் சூப்பிரின்டன்ட் திரு. ஹோப்மன், காலி (உள்ளூர்) உதவி பொலிஸ் சூப்பிரின்டன்ட் திரு. மகமூர் ஆகியோர் ஆலோசனை அபிப்பிராயம் கொண்டிருந்தனர். திரு நீல் டி' அல்விஸ் கைது செய்யப்பட்டது சம்பந்தமாகப் பதிவு செய்யப்பட்டிருந்த 'காவல் உத்தரவு' என்ற எழுத்தை 'கேள்வி' என்று மாற்றுவது பற்றியே இவர்கள் ஆலோசனை செய்தனர்.

சதிவழக்கு விசாரணையில் நேற்று சாட்சியமளித்த காலி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எச். ஏ. குணதிலகா முடிக்குரிய வழக்கறிஞர் திரு. நோயல் தித்தவெலாவினல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. குணதிலகா தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

"நான் காலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த போது1962-ம் வருடம் ஜனவரி 27-ம் திகதி காலி

(5-ம் பக்கம் பார்க்க)

# "பெண்களின் முக்கிய பொறுப்பு"

உடுப்பிட்டி, வியாழன்

"பெண்கள் நினைத்தால் உலகத்தை நல்வழிப்படுத்தலாம். அதை அழித்துவிடலாம். இவற்றுக்குச் சரித்திரங்களே பதில் கூறும். இவ்வாழ்க்கையின் முழுப் பொறுப்பும் பெண்களின் கையில்தான் உண்டு. இல்வாழ்க்கையில் முக்கிய பொறுப்பை வகிக்கும் பெண்கள் நாட்டில் மாதர் சமுகமுன்னேற்றச் சங்கங்களில் முன்னின்று மக்களை நல்வழி நடத்திச் செல்லவேண்டும்."

இவ்வாறு துன்னலை தெற்கு 'தயாநிதி மாதர் முன்னேற்றச் சங்க' அங்குரார்ப்பணக் கூட்டம் மேற்படி நிலையத்தில் நடைபெற்றபொழுது திரு. எஸ். செல்லையா பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு ஆ.குலேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திருமதி பாக்கியம் குலேந்திரம். உபதலைவி: திருமதி அழகம்மா குலம். காரியதரிசி: திருமதி பூங்கிளி செல்லையா. உப காரியதரிசி: திருமதி சற்குணம் தவயோகம் தனதிகாரி: திருமதி பாக்கியம் நாகமணி. உபதனதிகாரி: திருமதி மாணிக்கம் செல்லையா,

பொது நிர்வாகசபை அங்கத்தவர்களாகப் பதினொரு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் சுவை நிரம்பியிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைபபடுகின்றனர்! ஏற்கனவே நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் (அநேகமாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், இன்றே இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்களே தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளிர்மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 24-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — ஆர். சோமநாதன், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 1-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழத்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம் — ஆர். வடிவேலு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மதிப்புரை, 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-45 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை 2-10 டி. பி. ராமகிருஷ்ணன் — பாட்டு.

மாலை 5-15 கும்பகோணம் எ. பக்கிரிசாமிப்பிள்ளை — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கி எழும் பாரதம் — சித்திரம், 7-45 சித்தூர் சுப்பிரமணியபிள்ளை — பாட்டு, 9-15 இசைமாலை, 9-45 பலகணி, 10-00 திரைப் பட இசை.

## தகவல் புத்தகத்தில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் சூப்ரிண்டனிடமிருந்து இரவு 9 மணியளவில் ஒரு செய்தி எனது வீட்டுக்கு வந்திருந்தது. அதில் அவரைச் சந்திக்கும்படி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நான் திரு. பெரேராவின் பங்களாவுக்குச் சென்றேன். அங்கு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று உத்தரவுகளுக்காக காத்திருக்குமாறு சூப்ரிண்டன்ட் எனக்கு அறிவித்தார். அதன் படி நான் காலி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றேன். இரவு சுமார் 11 மணியளவில்பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து செய்தி ஒன்று வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டேன். 'எனது அறிவித்தலின்றி எந்த உத்தரவுகளையும் அமுல் நடத்தக் கூடாது' என பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து செய்தி வந்திருந்தது. மிக அவசர செய்தியாக இதைக்கவனிக்கும் படியும் தெரிவிக்கப்பட்டது".


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## டாக்டருக்கு வெள்ளி விழா

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடியிலுள்ள லங்கா ஆயுள்வேதவைத்தியசாலைஅதிபர் டாக்டர் பயஸ் பஸ்தியாம்பிள்ளையின் 25 வருடகால வைத்திய சேவையைப் பாராட்டி வடமராட்சிப்பகுதி மக்களால் வெள்ளிவிழாவொன்று நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் கொண்டாடப்பட்டது.

தேவரையாளி இந்துக்கல்லூரியிலிருந்து விழா நடைபெறுமிடத்திற்கு டாக்டர் பயஸ் பஸ்தியாம்பிள்ளை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். இடையே வதிரி கலாநிலையத்தினரின் சார்பில் நடாத்தப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். எஸ்.சபாரத்தினம், எம்.வேதாரணியம், டி. ரி. சாமுவேல், கலாவினோதன் எம். பி. அண்ணாசாமி, சைவப்புலவர் எஸ். வல்லிபுரம் ஆகியோர் பேசினர்.

நெல்லியடி பட்டினசபைத் தலைவர் திரு. வே. க. பொன்னையா பேசுகையில், எமது சமுதாயம் 1948-ம் ஆண்டிலிருந்து 1000 அடி பின்தள்ளப் பட்டதேயன்றி ஒரு அங்குலம் தானும் முன்னேறவில்லையென்றார்.

வதிரி உப தபாற்கந்தோருக்கு அண்மையில் வைத்து அல்வை 'பழனிப்பதி'யைச்சேர்ந்த திரு. க. கிருஷ்ணபிள்ளையால் வாழ்த்து மடல் ஒன்று வழங்கப்பட்டது. நெல்லியடியில் நடைபெற்ற வெள்ளி விழாக் கூட்டத்திற்கு திரு.வே. க. பொன்னையா தலைமை வகித்தார். சமாதான நீதிபதி திரு. எஸ. எஸ். சபாரத்தினம் பேசுகையில் "ஏழை, பணக்காரன் என்று பார்க்காமல் கண்ணியமானமுறையில் வைத்திய சேவை புரியும் டாக்டர் பயஸ் பல்லாண்டுகாலம்வரை வாழவேண்டும்" என்று கூறினார்.

நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. க. ஞானசுப்பிரமணியம், திரு. க. பேரம்பலம், திருவாளர்கள் யோவ்பிள்ளை, எஸ. செல்வநாயகம், வேதாரணியம், தணிகாசலம் ஆகியோரும் டாக்டரின் சேவை நலம் பாராட்டிப் பேசினர்.

நெல்லியடி சனசமூக நிலைய சார்பில் பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. பின்னர் டாக்டர் பயஸினால் நெல்லியடியில் கட்டப்பெற்ற புதிய வைத்தியசாலைக் கட்டடத்தை திரு. பொன்னையா திறந்துவைத்தார். திறப்புவிழாவின் பின்னர் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கல்நகர் கனுவில் சனசமூக நிலையச் சார்பில் பாராட்டுபபத்திரமும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

டாக்டர் பயஸ் பஸ்தியாம்பிள்ளை தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

## இ. போ. ச. டிப்போ விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் புதுவருடக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டன.

இவ்விழாவையொட்டி நடைபெற்ற 440 யார் ஓட்டத்தில் திரு. டி. மயில்வாகனம் என்பவரும், பிரயாணச்சீட்டு எழுதும்போட்டியில் கே. சின்னத்தம்பி என்பவரும் பாதுகாப்பான முறையில் பின்பக்க சாரத்தியத்தில் ரி. சோதிலிங்கம் என்பவரும் முதலிடங்களைப் பெற்றனர்.

டிப்போ தொழிலாளருக்கும் பஸ் தொழிலாளர்கட்கும் இடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் டிப்போ தொழிலாளர் கோஷ்டியும், கயிறு இழுத்தல் போட்டியில் பஸ்தொழிலாளர் கோஷ்டியும் வெற்றியீட்டின. வெளியார் போட்டியின்போது நடாத்தப்பட்ட சிகரற் பற்றவைத்தல் போட்டியில் நகரசபைத் தலைவர் நடராசா வெற்றிபெற்றார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினமும் கலந்துகொண்ட இவ்விழாவில் வெற்றிபெற்ற வீரர்கட்கு நகரசபைத் தலைவர் திரு. நடராசா பரிசில்களை வழங்கிப் பாராட்டினார்.

## திருமலை துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதி

கொழும்பு, புதன்

இலங்கையிலிருந்து தேயிலையை ஏற்றிக்கொண்டு தம் நாட்டுக்குச் செல்லவிருக்கும் ரஷ்ய கப்பல்கள் இனிமேல் திருக்கோணமலை துறைமுகத்தில் வைத்தே தேயிலையை ஏற்றிக் கொள்ளும்.

கடந்த வாரம் 1500 தொன் தேயிலையை திருக்கோணமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு முதல் கப்பல் ரஷ்யா சென்றுள்ளது. இரண்டாவது கப்பல் அடுத்த வாரம் தேயிலையை திருக்கோணமலை துறைமுகத்தில் வைத்து ஏற்றிக்கொண்டு ரஷ்யா செல்லும்.

இதுவரையும் ரஷ்ய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் வைத்தே தேயிலையை ஏற்றிக் கொண்டு தாய்நாடு சென்றன.

## இந்து அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம், வெள்ளி

தொல்புரம் இந்து அபிவிருத்திச்சபையின் வருடாந்தக் கூட்டம் மாணமுதலியார் மடமண்டபத்தில் திரு. வே. கார்த்திகேசுவின் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவு வருமாறு:-

தலைவர்: திரு. வே. கார்த்திகேசு. உப-தலைவர்: திரு. பொ. ஆறுமுகம். காரியதரிசி: திரு. நா. மகாதேவா. உப-காரியதரிசி: திரு. ச. கைலாசபிள்ளை. தனாதிகாரி: திரு. கு. கணபதிப்பிள்ளை.

## உரும்பராயில் நடேசர் பிரதிஷ்டை

உரும்பராய், புதன்

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில பதினையாயிரம் ரூபாவுக்குமேல் புதிதாக அமைக்கப்பட்ட நடேசர் ஆலயத்தில், புதிய நடேசர் விக்கிரகம் வெள்ளிக்கிழமை காலை பிரதிஷ்டை செய்துவைக்கப் படும்.

கும்பாபிஷேக நாளானவெள்ளிக்கிழமை இரவு திருக்கல்யாண விழாவும், கருணாகரப் பிள்ளையார், ஆறுமுகசுவாமி, நடேசர் திருவுலாவும் நடைபெறும். அன்று அன்னதானமும் நடைபெறும்.

## இன்னிசைக் கச்சேரி

கொழும்பு, வியாழன்

ஈழக்கலைமன்றத்தின் ஆதரவில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை செல்வி ஜெயலக்ஷ்மி சதாசிவம் ஓர் இன்னிசை விருந்தளித்தார்.

அன்றைய கச்சேரிக்கு இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நடராசா தலைமை தாங்கினர். ஈழக்கலைமன்றத்தின் சார்பில் திரு. சபாரத்தினம் பேசினர்.

## ஐக்கிய மேதினவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்கசேவைத் தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் யாழ்ப்பாணக் கிளை நிர்வாகக் கமிட்டி, இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் இணைந்து மேதினவிழாவைக் கொண்டாடுவதென்றும், திரு நெல்வேலி கிருஷ்ண பாடசாலையிலிருந்து அங்கத்தவர்கள் ஊர்வலமாக வந்து இடதுசாரிமுன்னணிஊர்வலத்துடன் இணைந்து பகிரங்கக் கூட்டம் நடாத்தபபடும் முற்றவெளியைப் போய் அடைவதென்று தீர்மானித்தது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கரணவாய் தெற்கு முதலைக் குளம் முருகையன் கோயிலுக்கு அருகாமையில் 18 1/2 பரப்பு வளவு வீட்டுடன் உடனே விற்பனைக்குண்டு. அ. சுந்தரம், மூளாய். 247

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில் அருமையான வீட்டுத் தளபாட நிலையம் விற்பனைக்கு இருக்கிறது. காலை 9-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரை நாதன், 82, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில்விசாரிக்கவும். 253

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நெசவு ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள நெசவு தொழிலாளர்கள் தேவை. உரியவேதனமும், ஸ்தாபன வளர்ச்சியைப் பொறுத்து லீவு, பிரவிடென்ற் சேமநிதிச்சலுகைகளும் வழங்கப்படும். தங்குவதற்கு இடவசதி கொடுக்கப்படும். கீழ்க்குறித்த விலாசத்திற்கு மனுச்செய்க: "பவதாரிணி இண்டஸ்றீஸ்" கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி. 254

### Important Announcement

**Secretarial and Accountancy Tutory**

1. The above institute also provides tuition for Intermediate Examination of the Institute of Bankers to be held in September.

2 Applications for all courses inclusive of the Intermediate of Cost and Works Accountants and Chaartered Secr etaries will be finalised before 30th instant.

3. Failing accomodation in the morning or After-noon Sessions, accomodation can be provided in the evening courses which will be from 5 — 7 p. m.

4 The composite fees per month for Secretaries Intermediate is Rs 50/-, for cost and Works Rs 60/- and for Banking Rs. 40/- The fees per supject is Rs 15/-.

Contact Registrar: Kumaraswamy Buildings, Opposite Bus Stand. Power-House Road, Grand Bazaar, Jaffna. 257


## புதுவருட நிர்வாகிகள்

உடுப்பிட்டி, வியாழன்

உடுப்பிட்டி இமையாணன் சிவனடி சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. க. தணிகாசலம், உபதலைவர்: திரு ந. அம்பிகாபதி, செயலாளர்: திரு. சோ. சபானந்தன், உப செயலாளர்: திரு. இ. சிவராசா, பொருளாளர்: திரு. கு. ஆனந்தராசா, உபபொருளாளர்: திரு எஸ். ஆறுமுகானந்தஈசுவரன், பத்திராதிபர்: திரு. பா. சிவபாலதாஸ், உப பத்திராதிபர்: திரு. ப. இராசேந்திரம், நூல் நிலையப் பொறுப்பாளர்: திரு. இ. விஷ்ணுலிங்கம், கணக்குப் பரிசோதகர்:திரு ந. சிவசுப்பிரமணியம்.

## வெளிச்ச வசதி

கைதடி, வியாழன்

கைதடி–நாவற்குழி தெற்குப் பகுதியிலுள்ள கடற்தொழிலாளரின் நலனை முன்னிட்டு ஸ்ரீமகா விஷ்ணு கடற்தொழிலாளர் சங்கம் வேண்டிக் கொண்டதன் பிரகாரம் கடற்றொழிற் பகுதியாரின் உதவி கொண்டு நாவற்குழி கிராம சபையின் முயற்சியால் புது வருடதினத்தன்று துறைமுகத்தில் வெளிச்சம் ஏற்றப்பட்டது. இவ் வைபவத்தில் நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. வே. சிவசுப்பிரமணியமும் கலந்துகொண்டார்.


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினுல், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுற்ககிமுறை மாற்றுப் பொறி சுழற்கி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனுல்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி சவ்வளவுதூரம் அது சேவை செய்யும என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஐஸ்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ்எயிட்ஸ்

## சுகாதாரவாரம்

நல்லூர், வெள்ளி

ஜூன் மாதம் 8-ம் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கு மக்கள் சுகாதார வாரத்தைக் கொண்டாடுவதென சுகாதாரப் பகுதி முடிவுசெய்துள்ளது. 'தாயின் ஆரோக்கியம்' என்பது தான் இவ் வருட சுகாதார வாரத்திற்குரிய பொருளாகும். இதுசம்பந்தமாக சுகாதாரப்பகுதி அதிபர் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### வேதநாயகி

நீராவியடி திரு. அ. விஸ்வநாதன் இளைப்பாறிய C. C. S அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்ற புறக்டர் அ. அருனம்பலத்தின் மாமியாரும் வள்ளியம்மையின் அருமைத் தாயாரும் திலகவதி யோகநாதன், அம்பலவாணர், சேனாதிராசா, ஞானசம்பந்தன் ஆகியோரின் பேத்தியும் அருள்மொழியின் பாட்டியும் ஆகிய வி. வேதநாயகி சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (24-4-64) வெள்ளி காலை அவரின் கல்லூரி வீதி 88-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்றுக் காலை 9 மணி வரையில் அவரின் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 88, கல்லூரி வீதி, நீராவியடி.

359


**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
Daily 3 Shows Sats. & Suns. Four
RICHARD BASEHART
DON TAYLOR
in
**The Savage Guns**
(Metroscope - Metroscolur)


## இன்று

மாலை 6-00 மணிக்கு கன்னுகம் கி. மு. சங்க மைதானத்தில் லெனின் தினக் கூட்டம் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும். சோவியத் பொருளாதார நிபுணர் திரு. சமுசென்கோவ், திரு. வி. தருமலிங்கம், திரு. வி. கே. கணேசவேல், திரு. க. சிவகுரு, திரு. வி. பொன்னம்பலம் ஆகியோர் பேசுவர்.

●

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோவில் முன்றலில் நடைபெறும் தென்மராட்சி இசைக்கலை மன்ற இசைவிழா நிகழ்ச்சிகள். மாலை 6-00 திருமதி ஆச்சிப்பிள்ளை குமாரசாமி பாட்டு; மாலை 7-00 எஸ். இராஜையா, வி வி. நடேசன், எஸ் விஜுசித்தம்பி ஆகியோரின் திருமறை ஓதல். மாலை மாலை 8-00 திருமதி மோகனும்பிகை கணேசன் பாட்டு. 9-00 திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை காரியாதிகாரி தலைமையுரை. 9-15 திரு. ராம் குமாரசாமி பாட்டு. 10-30 கதாப்பிரசங்கம்- திரு. எஸ். விஜுசித்தம்பி.

●

திருநெல்வேலி அரசடி அம்மன் கோயிலில் மாலை 6-00 மணிக்கு நவாலியூர் லை. நல்லையா, "ஆரூரில் அருளிப்பாடு" என்னும் பெரிய புராணத் தொடர்ச்சிப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

●

மாலை 6-45 நல்லூர் சண்முகதீர்த்த மண்டபத்தில் திரு. த. சுப்பிரமணியம் 'சமய தத்துவங்கள்' என்னும் பொருள்பற்றியும், நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் திரு. சி. தம்பிஐயா "மகேஸ்வரபூஜை" என்னும் பொருள்பற்றியும், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் திரு. ப. கணபதிப்பிள்ளை "இறையருள்" என்னும் பொருள்பற்றியும் உரை நிகழ்த்துவர்.


**வெற்றிகரமான 5வது வாரம்!**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீ கிருஷ்ணு** (திருகோணமலை) **விஜிதா** (ஹட்டன்)



எம். ஜி. ராமசசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
**பெரிய இடத்துப் பெண்**

**8வது வெற்றிகரமான வாரம்!**

**மைலன்** (கொழும்பு) **நவா** (கொம்பனித் தெரு)
மற்றும் 5 திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமார்
புஷ்பலதா — கருணாநிதி
நடித்த
**பணம் பந்தியிலே**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 88-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பிரதமர்-ஜி-ஜி-பேச்சு

### பிரதமர் காரியாலயம் மறுப்பு

கொழும்பு, வியாழன்

நுவரெலியாவில் விடுமுறையைக் கழித்துக்கொண்டிருக்கும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்குமிடையில் எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லையெனப் பிரதம மந்திரியின் காரியாலயத்திலிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

இவர்கள் இருவரும் சந்தித்துத் தற்போதைய அரசியல் நிலைபற்றி ஆலோசனை நடத்தினார்களெனப் பத்திரிகைகளில் வெளியான செய்தியைப் பிரதமரின் காரியாலயத்திலிருந்து பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்ட அந்தத் தகவல் மறுத்துள்ளது.

## வரித்தொகைகளை குறைக்க கோரிக்கை

கொழும்பு, வியாழன்

புதிதாக விதிக்கப்பட்டுள்ள இரு வரிகளின் தொகையைக் குறைக்குமாறு இலங்கைத் தேசிய கைத்தொழில் சபை நிதிமந்திரியைக் கேட்டுக்கொள்ளவிருக்கின்றது.

அண்மையில் நடைபெற்ற சபையின் அவசரக் கூட்டத்தில் உற்பத்தியாளர் மொத்த வரி, வர்த்தக மொத்த வரி ஆகிய இரு வரிகளின் தொகைகளைக் குறைக்கவேண்டுமென நிதிமந்திரியைக் கேட்டுக்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது. எனினும் இப்போதைக்கு வரி செலுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. சபையில் உபதலைவர் திரு வி. அழகரத்தினம் தலைமையில் 200 அங்கத்தவர்கள் வரித்தொகைகளைக் குறைக்கக் கோருவர்.

## மேதின நிகழ்ச்சிகள்

### அரசாங்க ஊழியர் சங்கங்கள் பரிசீலனை

காங்கேசன்துறை, வியா.

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள பல அரசாங்க ஊழியர் சங்கங்கள் இன்று காங்கேசன்துறை பட்டின சபையில் கூடி மே தினக்கொண்டாட்டம் சம்பந்தமாக ஆராய்ந்தன. இக் கூட்டத்தில் உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பார்வையாளராகக் கலந்துகொண்டார்.

மே தினமன்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கலந்துகொள்வதென்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மே தினத்தை வேறு எவ்விதம் கொண்டாடுவது பற்றி ஆராயும் பொருட்டு எதிர்வரும் திங்கட்கிழமை காங்கேசன்துறை பட்டின சபையில் மேற்படி சங்கங்களின் ஆலோசனைக் கூட்டமொன்றும் நடைபெறும்.

## காணிக்கச்சேரி நடைபெறும் தினங்கள்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கான குடியேற்றத் திட்டங்களுக்குரிய காணிக்கச்சேரிகள் அடுத்த மாதம் 20-ந் திகதி முதல் ஒரு மாத காலத்திற்கு யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள காரியாதிகாரி கந்தோர்களில் நடத்தப்படுமென அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

காணிக்கச்சேரிகள் நடத்தப்படுமிடமும் திகதிகளும் வருமாறு:-

பச்சிலைப்பள்ளி ஜூன் 20, பூநகரி ஜூன் 21, யாழ்ப்பாணம் ஜூன் 22, தீவு ஜூன் 27, வலிகாமம் கிழக்கு ஜூன் 28, வடமராட்சி ஜூலை 1, கரைச்சி ஜூலை 2, வலி-வடக்கு ஜூலை 3, வலி-மேற்கு ஜூலை 4, தென்மராட்சி ஜூலை 5, துணுக்காய் ஜூலை 8, நெடுந்தீவு ஜூலை 18.

## மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபை வட்டார விஸ்தரிப்புப் பற்றியும் அதன் வட்டாரங்களை மீள வரையறுத்தலையும் பற்றிய சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய உள்நாட்டமைச்சரால் நியமிக்கப்பட்ட இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. சி. எக்ஸ். மார்ட்டின்ஸ் விரைவில் தமது வேலையை ஆரம்பிப்பாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் திரு மாட்டின்ஸ் ஆராய்ச்சிக் குழுச் செயலாளராகக் கடமையாற்றுவார். மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக பொதுஸ்தாபனங்கள், ஊர்ப் பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்கள் கோரப்படுமெனவும் அறியப்படுகிறது.

## "தண்டனையை குறைக்கவும்"

### மரண தண்டனைபெற்ற கேன் அப்பீல்

சைகோன், ஏப்ரல் 23

காலம் சென்ற முன்னை தென்வியட்னும் அதிபர் நூடின் டியத்தின் இளைய சகோதரருக்கு புரட்சி விசாரணை நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. இத்தண்டனையை ஆயுட் சிறைத் தண்டனையாகக் குறைக்கும்படி அவர் விண்ணப்பித்தள்ளார்.

அதிபர் டின் டியமின் ஆட்சிக் காலத்தில், அவரின் சகோதரரான நூ டின் கேன், பல கொலைகளையும் குற்றங்களையும் புரிந்த குற்றத்துக்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## விஞ்ஞான அரங்கம்

கொழும்பு. வியாழன்

கல்வி இலாகாவும், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கமும், அமெரிக்க ஸ்தானிகராலய தகவல் பகுதியின் உதவியுடன் இம்மாதம் 27-ந் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 8-ந் திகதிவரை அமெரிக்க விஞ்ஞான அரங்கம் ஒன்றை நடத்தவிருக்கின்றன.

இலங்கையில் விஞ்ஞான கல்வியை வளர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் இந்த அரங்கம் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் மே மாதம் நாலாம், ஐந்தாம் திகதிகளில் நடைபெறும்.

## மாஸ்கோவில் ஷேக்ஸ்பியர்

மாஸ்கோ, ஏப். 23

மகாகவி ஷேக்ஸ்பியரின் 400-வது பிறந்ததினம் மாஸ்கோவிலும், ரஷ்யாவின் இதர இடங்களிலும் பரந்த அளவில் கொண்டாடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ரஷ்ய, ஆர்மினிய, எஸ்தோனிய, மற்றும் பல மொழிகளில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களும், வெளியீடுகளும் இடம்பெற்றிருக்கின்றன. மாஸ்கோவில் பல ஷேக்ஸ்பியர் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. போல்ஷாய் நாடக அரங்கில் கவிஞரின் நாடகங்கள் நடிக்கப்படவிருக்கின்றன. இதில் பல கவிஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் ஆகியோர் பங்கு பற்றுகிறார்கள்.

## "அரசாங்கபதவிக்கு நான் ஆளல்ல"

ஹாங்காங், ஏப். 23

"எனது தந்தைக்குப் பிறகு நான் இந்தியப் பிரதமராக மாட்டேன்" என ஹாங்காங் நிருபர்களின் கேள்விக்குப் பதிலளித்த ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறினார்.

## மேலதிக உருளைக்கிழங்கு இறக்குமதிசெய்யப்பட்டது

கொழும்பு, வியாழன்

நாட்டுக்குத் தேவையான அளவுக்கு மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமான உருளைக்கிழங்கும் வெண்காயமும் இம்மாதம் இறக்குமதி செய்யப்பட்டள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தைகளில் உருளைக்கிழங்கும் பம்பாய் வெண்காயமும் தேங்கிக் கிடப்பது சம்பந்தமாகுவே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட இறக்குமதியாளர் திட்டமின்றி எல்லோரும் ஒரேசமயத்தில் இறக்குமதி செய்வதாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் சுமார் 10,000 தொன் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அக்வைனஸ் தமிழ் மன்ற கலைநிகழ்ச்சி

கொழும்பு, புதன்

அக்வைனஸ் தமிழ் மன்றத்தினரின் கலைநிகழ்ச்சிகள் சென்ற சனிக்கிழமை அக்வைனஸ் மண்டபத்தில் நடைபெற்றது. செல்விகள் வாசுகி நகுலேசு, சரோஜினி மெய்யப்பன் மற்றும் பொ. ஸ்ரீரங்கநாதன், சகாதேவன் ஆகியோரது, "ஈழத் தமிழ்நாடு" என்ற இனிய பாடலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மன்றத்தலைவர் செல்வன் நா. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் தமிழ் மக்கள் தங்கள் கருமங்களைத் தமிழிலேயே செய்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வாத்திய இசை நிகழ்ச்சியில் செல்வி அன்னலட்சுமி பொன்னம்பலம் வயலினும் செல்வி சுந்தரி பொன்னம்பலம் வீணையும் வாசித்தனர். செல்வன் சக்கிரவர்த்தியின் பாட்டுக் கச்சேரியைத் தொடர்ந்து பொ. ஸ்ரீரங்கநாதன், சகாதேவன் ஆகியோரது இரு குரலிசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

செல்வி வாசுகி நகுலேசு மெல்லிசை விருந்தளித்தனர். காருகுறிச்சி அருணாசலத்தின் நாகசுர இசைக்கு செல்வி யோகாம்பிகை மெய்யப்பன் நடனமாடினர்.

செல்வன் சோ. கமலாகரனின் "நவீன சீதா கல்யாணம்" என்னும் பொருள்பற்றிய கதாக்காலட்சேபமும், இராஜ் நகச்சுவை மன்றத்தினது "பொதுநலமா? சுயநலமா?" என்ற நாடகமும் இடம்பெற்றது. மன்றச் செயலாளர் செல்வி தேவிகா சந்திரசேகரா நன்றி கூறினர்.

## பொதுநல நோக்கு கடிதப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

மாதகல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பொதுநல நோக்கு கடிதப் போட்டியொன்றை நடத்தவிருப்பதாகவும் சிறந்த ஒரு கடிதத்துக்குப் பரிசளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "சிங்களம் படிக்க வசதி செய்க!"

### விஞ்ஞான பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வேலையற்ற விஞ்ஞானப் பட்டதாரிகளுக்குச் சிங்களப் பகுதிகளில் இடம் பெற வசதிகளிருப்பதால், அவர்கள் சிங்களம் மூலம் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு சிங்களத்தில் அறிவு பெறக்கூடியதாகச் சிங்களம் படிக்கக்கூடிய வசதியை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தித்தருமாறு வேலையற்ற தமிழ் விஞ்ஞான பட்டதாரிகள் கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது